Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# TN MRB
# Pharmacist

## Previous Year Paper
### (Tamil Eligibility Test)
### 27 Apr, 2023 Shift 1

Teachingninja.in

SET 1

1. ‘நெடுந்தொகை’ என்றழைக்கப்படும் சங்க இலக்கிய நூல்

   (A) புறநானூறு

   (B) நெடுநல்வாடை

   (C) அகநானூறு

   (D) நற்றிணை

2. “நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக்
   குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்” என்கிறது –

   (A) மலைபடுகடாம்

   (B) சிறுபாணாற்றுப்படை

   (C) பொருநராற்றுப்படை

   (D) பெரும்பாணாற்றுப்படை

3. மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், முருகன் அல்லது அழகு போன்ற நூல்களின் படைப்பாளர்

   (A) மு. வரதராசனார்

   (B) திரு.வி.கலியாண சுந்தரனார்

   (C) நாமக்கல் கவிஞர்

   (D) மறைமலையடிகள்

4. இடம்புரி புயலோடு தொடர்பில்லாத நாடு

   (A) அமெரிக்கா

   (B) ஜப்பான்

   (C) ஆஸ்திரேலியா

   (D) சீனா



Teachingninja.in

5. மனிதர்களின் மனநிலை எத்தனை நிமிடங்களுக்கு ஒரு முறை மாறும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்?

(A) தொண்ணூற்றாறு

(B) தொண்ணூறு

(C) நூறு

(D) நூற்றி இருபது

6. சாகித்ய அகாதமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர்

(A) சிவசங்கரி

(B) ராஜம் கிருஷ்ணன்

(C) தாமரை

(D) அனுராதா ரமணன்

7. ம.பொ. சிவஞானம் எழுதிய தன்வரலாற்று நூல்

(A) வனவாசம்

(B) எனது போராட்டம்

(C) என் சரித்திரம்

(D) என் கதை

8. நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும்
அறனும் காத்தலும் அமைச்சர் கடமை
– என்று கூறும் நூல்

(A) மலைபடுகடாம்

(B) பதிற்றுப்பத்து

(C) மதுரைக்காஞ்சி

(D) குறிஞ்சிப்பாட்டு



Teachingninja.in

9. “இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரித் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும்....” என்ற கவிதை வரிகளைப் பாடியவர்

(A) கவிமணி தேசிக விநாயகனார்

(B) பாரதிதாசன்

(C) பாரதியார்

(D) மு. மேத்தா

10. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும்

(A) மதுரைக்கலம்பகம்

(B) நைடதம்

(C) வாயு சம்கிதை

(D) லிங்க புராணம்

11. 1930ஆம் ஆண்டு தமிழ்விடு தூது நூலை முதன் முதலில் பதிப்பித்தவர்

(A) ம. பொ. சிவஞானம்

(B) உ.வே. சாமிநாதர்

(C) வ.உ. சிதம்பரனார்

(D) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

12. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது / சரியானவை எது / எவை?
கூற்று 1 : நாச்சியார் திருமொழி 145 பாடல்களைக் கொண்டது

கூற்று 2 : நாச்சியார் திருமொழியைப் பாடியவர் ஆண்டாள்

(A) கூற்று 1 மற்றும் 2 சரி

(B) கூற்று 1 மட்டும் சரி

(C) கூற்று 1 மற்றும் 2 தவறு

(D) கூற்று 1 தவறு மற்றும் கூற்று 2 சரி



Teachingninja.in

13. தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) சூழி — காலில் அணிவது

(B) அரைநாண் — இடையில் அணிவது

(C) சுட்டி — நெற்றியில் அணிவது

(D) குழை — காதில் அணிவது

14. காசிக் காண்டத்தில் அதிவீரராம பாண்டியர் கூறும் இல்லற ஒழுக்கங்களின் எண்ணிக்கை

(A) ஒன்பது

(B) ஏழு

(C) ஆறு

(D) நான்கு

15. மேகம் மழை பொழிவது போல் கவிதைகளை விரைந்து பாடுவதில் வல்லவர்

(A) அழகிய சொக்கநாதப் புலவர்

(B) வரதன்

(C) புலவர் குழந்தை

(D) மீனாட்சி சுந்தரனார்

16. "வள்ளல் கைத்தல மாந்தரின் மால்வரை" – என்பதில் "மால்வரை" என்பதன் பொருள்

(A) திருமால்

(B) பெரிய மலை

(C) சின்னமலை

(D) உச்சி

17. திருக்குறள் எத்தனை இயல்களை உடையது?

(A) 3

(B) 6

(C) 9

(D) 12



Teachingninja.in

18. ‘நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பு’ என்பது

(A) திருக்குறள்

(B) ஆசாரக்கோவை

(C) மூதுரை

(D) நற்றிணை

19. மலைமேல் பாதுகாப்பாக நின்று கொண்டு யானைப் போரைக் காண்பது எதைப் போன்றது?

(A) கடன் பெற்று ஒரு செயலைச் செய்வது

(B) பொருள் இல்லாமல் ஒரு செயலைச் செய்வது

(C) தன் கைப்பொருளைக் கொண்டு ஒரு செயலைச் செய்வது

(D) ஒரு செயலையும் செய்யாமல் இருப்பது

20. ‘வற்றல்’ – பெயர்ச்சொல்லின் வகையைக் கண்டறிக .

(A) தொழிற் பெயர்

(B) இடுகுறிப் பெயர்

(C) காரணப் பெயர்

(D) பண்புப் பெயர்

21. அண்டம், திருநகர், முண்டகம், புறவு, கூடல் – சொற்களை அகரவரிசைப்படி சீர் செய்க.

(A) திருநகர், முண்டகம், புறவு, அண்டம், கூடல்

(B) அண்டம், கூடல், புறவு, திருநகர், முண்டகம்

(C) அண்டம், கூடல், திருநகர், புறவு, முண்டகம்

(D) கூடல், திருநகர், முண்டகம், அண்டம், புறவு

22. ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! கல்லில்
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்
— இவ்வடிகளில் பயின்று வருவது

(A) இணை எதுகை

(B) பொழிப்பு எதுகை

(C) கூழை எதுகை

(D) முற்று எதுகை



Teachingninja.in

23. “பாலொடு வந்து கூழொடு பெயரும்....” பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல்

(A) நற்றிணை

(B) அகநானூறு

(C) பட்டினப்பாலை

(D) குறுந்தொகை

24. “பிழையா நன்மொழி” என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது.
தொடருக்கேற்ற வினாத் தொடரைத் தேர்ந்தெடுக்க.

(A) பிழையா நன்மொழி என்பது என்ன?

(B) வாய்மையை நற்றிணை எவ்வாறு குறிப்பிடுகின்றது?

(C) வாய்மை என்பது யாது?

(D) பிழையா என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?

25. “கொண்டான்” என்பதன் வேர்ச்சொல்

(A) கொண்டு

(B) கொண்

(C) கொள்

(D) கொண்ட

26. பொருந்தா இணையைத் தேர்க.

| | | |
|---|---|---|
| (A) பின்வரு நிலையணி மூன்று வகைப்படும் | — | பின்வரு நிலையணி எத்தனை வகைப்படும்? |
| (B) கவிதை இயற்றும் முறைகளைக் கூறும் இலக்கணமே யாப்பிலக்கணம் | — | கவிதை இயற்றும் முறைகளைக் கூறும் இலக்கணம் எது? |
| (C) உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும் | — | எப்பொருள்களுக்கு உரியதாய் உரிச்சொல் வரும்? |
| (D) எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும் | — | எழுவாய் என்பது எதைக் குறிக்கும்? |



Teachingninja.in

27. மன்னரை புலவரொருவர் ஏடாளும் அரண்மனை

காண நாடாளும் சென்றார் – சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

(A) புலவரொருவர் மன்னரைக் காண ஏடாளும் அரண்மனை நாடாளும் சென்றார்

(B) மன்னரைக் காண ஏடாளும் நாடாளும் புலவரொருவர் சென்றார் அரண்மனை

(C) ஏடாளும் மன்னர் நாடாளும் அரண்மனை சென்றார் புலவரைக்காண

(D) ஏடாளும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காண அரண்மனை சென்றார்

28. பெருக்கெடுக்க வெள்ளம் வையை தெப்பம் திக்கி ஆற்றில் திணறியது — சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

(A) திணறியது ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுக்க திக்கி தெப்பம் வையை

(B) பெருக்கெடுக்க வெள்ளம் வையை திக்கி திணிறியது ஆற்றில் தெப்பம்

(C) வையை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுக்க திக்கித் திணறியது தெப்பம்

(D) திக்கித் திணறியது வையை பெருக்கெடுக்க தெப்பம் வெள்ளம் ஆற்றில்

29. ‘சிறுகதை மன்னன்’ என போற்றப்படுபவர்

(A) ஜெயதேவன் (B) ஜெயமோகன்

(C) ஜெயசந்திரன் (D) ஜெயகாந்தன்

30. ‘Missile’ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்

(A) செயற்கைக் கோள் (B) ஏவு ஊர்தி

(C) ஏவுதளம் (D) ஏவுகணை

31. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | ஹிப்பாலஸ் | 1. | பெய்ட்டி |
| (b) | காஸ்பார்ட் குஸ்டாவ் | 2. | கஜா |
| (c) | இலங்கை | 3. | பருவக்காற்று |
| (d) | தாய்லாந்து | 4. | கொரியாலிஸ் விளைவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 1 | 2 |



Teachingninja.in

32. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கொத்து | 1. | நெல், தினை |
| (b) | குலை | 2. | கேழ்வரகு, சோளம் |
| (c) | கதிர் | 3. | அவரை, துவரை |
| (d) | குரல் | 4. | கொடி முந்திரி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

33. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | நம்மாழ்வார் | 1. | காவடிச்சிந்து |
| (b) | அருணகிரிநாதர் | 2. | திருவாய்மொழி |
| (c) | அண்ணாமலையார் | 3. | குற்றால குறவஞ்சி |
| (d) | திரிகூடராசப்ப கவிராயர் | 4. | திருப்புகழ் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 3 | 2 | 1 | 4 |



Teachingninja.in

34. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | நாற்காலிக்காரர் | 1. | மருத்துவர் கு. சிவராமன் |
| (b) | ஆறாம் திணை | 2. | ராஜம் கிருஷ்ணன் |
| (c) | சிறுவர் நாடோடிக் கதைகள் | 3. | ந. முத்துசாமி |
| (d) | வேருக்கு நீர் | 4. | கி. ராஜநாராயணன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

35. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | வாணிதாசன் | 1. | தேரூர் |
| (b) | பாரதிதாசன் | 2. | சிறுகூடல்பட்டி |
| (c) | கண்ணதாசன் | 3. | புதுவை |
| (d) | தேசிகவிநாயகனார் | 4. | வில்லியனூர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 1 | 3 |



Teachingninja.in

36. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | மகரசங்கராந்தி | 1. | பஞ்சாப் |
| (b) | உத்தராயன் | 2. | தமிழ்நாடு |
| (c) | லோரி | 3. | உத்திரப்பிரதேசம் |
| (d) | பொங்கல் | 4. | இராஜஸ்தான் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

37. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | முழவு | 1. | கஞ்சக் கருவி |
| (b) | சேகண்டி | 2. | நரம்புக் கருவி |
| (c) | கொம்பு | 3. | தோல் கருவி |
| (d) | பரிவாதினி | 4. | காற்றுக் கருவி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 2 | 4 | 1 |



Teachingninja.in

38. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கந்தர் கலிவெண்பா | 1. | பரஞ்சோதி முனிவர் |
| (b) | மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி | 2. | காளமேகப்புலவர் |
| (c) | திருவாணைக்கா உலா | 3. | வீரமாமுனிவர் |
| (d) | தொன்னூல் விளக்கம் | 4. | குமர குருபரர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

39. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம் | 1. | திருவாசகம் |
| (b) | பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை எட்டினோடு இரண்டும் அறியேனையே | 2. | சிலப்பதிகாரம் |
| (c) | பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின் | 3. | கம்பராமாயணம் |
| (d) | பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம் | 4. | மணிமேகலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 4 | 3 | 1 |



Teachingninja.in

40. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | நெடுநல்வாடை | 1. | எட்டுத்தொகை |
| (b) | பரிபாடல் | 2. | ஐம்பெருங்காப்பியம் |
| (c) | சிலப்பதிகாரம் | 3. | பதினெண்கீழ்க்கணக்கு |
| (d) | திருக்குறள் | 4. | பத்துப்பாட்டு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

41. சொல்லும் பொருளும் பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கோட்டி | 1. | மாலை |
| (b) | வசி | 2. | மன்றம் |
| (c) | கலாம் | 3. | மழை |
| (d) | தாமம் | 4. | போர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 1 | 4 | 2 | 3 |



Teachingninja.in

42. பொருத்துக:

(a) ஆக்குவது — 1. விரதம்

(b) போக்குவது — 2. ஞானம்

(c) நோக்குவது — 3. வெகுளி

(d) காக்குவது — 4. அறம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

43. பொருத்துக:

(a) நல்லுரை — 1. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(b) இனமும் மொழியும் — 2. பண்புத்தொகை

(c) மலர்க்கண்ணி — 3. ஆறாம் வேற்றுமைத் தொகை

(d) எருத்துக்கோடு — 4. எண்ணும்மை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |



Teachingninja.in

44. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | உசிலம்பட்டி | 1. | பண்புப்பெயர் |
| (b) | பணிவு | 2. | பொருட்பெயர் |
| (c) | எழுத்தாணி | 3. | இடப்பெயர் |
| (d) | வட்டக்கல் | 4. | தொழிற்பெயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

45. வேர்ச்சொல்லோடு பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கொன்றான் | 1. | காண் |
| (b) | கொண்டான் | 2. | கேள் |
| (c) | கண்டான் | 3. | கொல் |
| (d) | கேட்டான் | 4. | கொள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 1 | 3 | 2 |



Teachingninja.in

46. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | SKYPE | 1. | அருகலை |
| (b) | BLUETOOTH | 2. | முடக்கலை |
| (c) | WIFI | 3. | ஊடலை |
| (d) | OFFLINE | 4. | காயலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

47. ஓரெழுத்தொரு மொழி தரும் பொருளைச் சரியாகப் பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | வீ | 1. | மதகு நீர் தாங்கும் பலகை |
| (b) | ஓ | 2. | இழிவு |
| (c) | நை | 3. | புல் |
| (d) | வை | 4. | மலர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 4 | 1 | 2 |



Teachingninja.in

48. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பால சரஸ்வதி | 1. | சாகித்ய அகாதமி விருது |
| (b) | கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் | 2. | தாமரை செவ்வணி விருது |
| (c) | ராஜம் கிருஷ்ணன் | 3. | ஔவை விருது |
| (d) | சின்னப்பிள்ளை | 4. | காந்தி அமைதி விருது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

49. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | குணக்கு | 1. | தென்றல் |
| (b) | குடக்கு | 2. | வாடை |
| (c) | வடக்கு | 3. | கோடை |
| (d) | தெற்கு | 4. | கொண்டல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |



Teachingninja.in

50. எதிர்ச்சொற்களைப் பொருத்துக:

(a) எளிது — 1. புரவலர்

(b) ஈதல் — 2. அரிது

(c) அந்நியர் — 3. ஏற்றல்

(d) இரவலர் — 4. உறவினர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 1 | 3 | 4 |



Teachingninja.in

FOR ROUGH WORK

Teachingninja.in



Teachingninja.in